# அண்ணாசாலை

# மே மாதத்திற்குள் இருவழிப் பாதையாக மாற்றப்படும்!

## மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவிப்பு!!

சென்னை மார்ச் 27.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு 2012ஆம் ஆண்டு மெட்ரோ கட்டமைப்புபணிகளுக்காகஇரு வழி சாலையாக(எல்ஐசி முதல் ஆயிரம் விளக்கு வரை) இருந்த அண்ணா சாலை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது. மாற்றுவழியாகஜிபிரோடு இருந்து வருகிறது.

இந்நிலையில்மெட்ரோ ரெயில் நிலைய பணிகள் முடிவடைந்து ரெயில்கள் இயங்கும் நிலையில், அண்ணா சாலையை மீண்டும் இருவழி பாதையாக மாற்றும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிர்வாகம் கூறியிருப்பதாவது:

எங்கள் நிர்வாகம் சார்பில் பணிகள் ஏப்ரல் மாத இறுதிக்குள்முடித்துமாநகர காவல் துறையினரிடம் போக்குவரத்து வசதிக்காக ஒப்படைக்கப்படும்.

எல்ஐசி மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கான நுழைவு மற்றும் வெளியேறும் வாயில் அதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது அது முடிவடைந்தவுடன் அண்ணாசாலையில்உள்ள எல்ஐசி முதல் ஆயிரம் விளக்கு வரையிலான சாலை வழி போக்குவரத்து மாற்றப்படும். ஏற்கனவே பிப்ரவரி 10–ம் தேதி சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் பாகத்தின் கடைசி ரெயில் திட்டமான ஏஜீ டி எம் எஸ் முதல் வண்ணாரப்பேட்டைவரையிலான ரெயில் மார்க்கம் தொடங்கப்பட்டது.

ஆயிரம்விளக்கு எல்ஐசி ஆகியஇரண்டுரயில்நிலையங்களும் வெளியேறும் வாயில்கள் மட்டுமே இயங்கி வருகிறது

உள் நுழையும் வாயில்கள் இன்று வரை கட்டமைப்புபணிகள்ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் குறிப்பிட்ட இடைவேளைமிகவும்குறுகியசாலையைகொண்டது, இதில் பயணம் செய்ய இரு சக்கர வாகன ஓட்டிகள் பல ஆண்டுகளாக சிரமப்பட்டு வருகின்றனர். இந்த அனைத்து பணிகளும் ஏப்ரல்மாத இறுதிக்குள்முடிவடைந்துவிடும்அப்படிமுடிவடையும் பட்சத்தில் மே மாத தொடக்கத்தில் அண்ணாசாலை 7 வருடங்களுக்கு பின்பு மீண்டும் இரு வழி சாலையாக மாற்றப்படும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து சென்னை மெட்ரோரெயில்நிர்வாகம் உயரதிகாரிஒருவர்கூறியதாவது: நுழைவு வாயில் பணியைமுழுமையாகஒப்பந்ததாரர்செய்துமுடிக்கும் வரையிலும் பயணிகளை அதன் வாயிலாக உள்நுழைய அனுமதிக்கக் கூடாது என முடிவெடுத்துள்ளோம். பாதி முடிந்த நிலையிலும்அல்லதுமுடிக்காதநிலையில்பயணிகளை அதன் வாயிலாக உள்நுழைய எங்களுக்கு சம்மதம் இல்லை.

மேலும் இந்த பணிகள் முடிவடைந்தவுடன்சாலைகள் இடப்பட்டு சென்னை மாநகரக்காவல்துறையிடம் சாலை ஒப்படைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.